# இந்தியா மற்றும் பெலாரஸ் வெளியுறவுத்துறை அலுவலக ஆலோசனைகளை நடத்தின

இந்தியா பெலாரஸ் இடையேயான வெளியுறவு அலுவலக ஆலோசனைகளின் 4வது கூட்டம் புதுதில்லியில் 23 ஜூலை நடைபெற்றது. இந்த ஆலோசனைகளைத்தொடர்ந்து இந்தியா-பெலாரஸ் அரசுகளுக்கு இடையேயான வாணிபம் மற்றும் பொருளாதார ஒத்துழைப்பிற்கான 6வது கூட்டம் புதுதில்லியில் ஜூலை 24ந்தேதி நடைபெறுகிறது. உயர்மட்டக்குழு மட்டத்திலான பேச்சுவார்த்தைகள் பெலாரசின் வெளியுறவுத்துறை இணை அமைச்சர் மேதகு வேலண்டின் ரைபகோவ் மற்றும் வெளியுறவுத்துறை அமைச்சகத்தின் வெளியுறவுத்துறை செயலர் (கிழக்கு) திரு அசோக் கே. காந்தா ஆகியோர் தலைமை தாங்கினார்கள். பெலாரஸ் நாட்டின் தொழிற்துறை அமைச்சர் திரு டிமிட்டிரி எஸ். காட்டர்னிக் உணவு விருந்தின் போது இந்த பேச்சுவார்தையில் பங்கேற்றார். திரு காட்டர்னிக் மற்றும் திரு ரைபகோவ் ஆகியோர் மத்திய நிலக்கரி அமைச்சர் திரு ஸ்ரீபிரகாஷ் ஜேஸ்வாலை சந்தித்தனர்.

இந்த பேச்சுவார்த்தையின் போது இரு நாடுகளுடனான உறவுகளின் மொத்த அம்சங்கள் குறித்தும் அலசி ஆராயப்பட்டன. இரு நாடுகளுக்கும் இடையேயான வாணிபம் மற்றும் பொருளாதார உறவுகளை அதன் உச்சத்திற்கு பயன்படுத்திக்கொள்ள தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்வது என்று இரு நாடுகளும் சம்மதித்தன. இரு நாடுகளின் விவாதத்தின் போது உரம் முக்கிய அங்கம் வகித்தது. பொட்டாஷ் உரம் ஏற்றுமதியில் உலகின் முக்கிய பங்கு வகிக்கும் நாடுகளில் ஒன்றான பெலாரசில் இருந்து பொட்டாஷ் உரங்கள் அனுப்பப்படுவது குறித்து நீண்ட கால அடிப்படையில் ஏற்பாடுகள் செய்ய இந்தியா விருப்பம் தெரிவித்தது. பல்வேறு துறைகளில் ஒத்துழைப்பு குறித்த வாய்ப்புகள் பற்றியும் குறிப்பாக மருந்து, அறிவியல் மற்றும் தொழில்நுட்பம் மற்றும் படைப்பாற்றல் மிக்க தொழில்நுட்பங்கள் உள்ளிட்ட புதிய துறைகள் குறித்து ஆராய இரு தரப்புகளும் சம்மதித்தன.

இரு தரப்பிற்கும் பொதுவான பிராந்திய மற்றும் சர்வதேச விவகாரங்கள் குறித்தும் விவாதிக்கப்பட்டன. நடப்பு சர்வதேச சூழல் குறித்து விவாதிக்கப்பட்டன. ஐ.நா. மற்றும் அணி சேரா அமைப்பு போன்ற சர்வதேச அமைப்புகளில் நெருங்கிய ஒத்துழைப்பினை தொடர்வது என்றும் இரு தரப்பும் சம்மதித்தன.

**புதுதில்லி**
**23 ஜூலை 2013**